கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்
1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்

www.newwisdomministries.com

ஞானம் 5 - ஒலி 42 | 16-10-2022





# இறையாற்றல் மனம் வடிவில்...







# ஊனத்தில் உயிர்ப்பு சக்தி

அருட்பணி. சைமன் பீட்டர்

இறை ஞானத்தின் மீது அளவில்லா பற்றுக் கொண்டுள்ள ஞான ஒலி இணைய இதழின் வாசகர்களே, இறைவன் உங்களுக்கு இறை ஞானத்தின் ஆவியையும், இறையாற்றலையும் அருள வேண்டுமென்று உங்களை வாழ்த்துகின்றேன். இந்த அறிய பணியில் எங்களை இறைவன் அதிகமதிகமாய் பயன்படுத்த வேண்டுமென்று எங்களுக்காக செபிக்குமாறு உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இறைவனின் படைப்பில் யாரும் குறை காணவே முடியாது. நமது அகக் கண்களுக்குத் தெரியும் குறைபாடுகள், குறைகளல்ல, மாறாக அவை ஆற்றலின் மறுவடிவங்கள். அவை அவற்றின் சிறப்பியல்புகளை உள்ளடக்கியவை என்பதை நாம் இறை ஞானத்தில் புரிந்து கொள்ள வேண்டும். ஊனங்கள், கடவுளின் பார்வையில் மனிதக் கலப்பினால் உண்டானவையாக இருந்தாலும், அவற்றை அவ்வுயிர்களுக்கு ஆகச் சிறந்த சிறப்பியல்புகளாக மாற்றி இறைவன் மறுவடிவம் தருகின்றார். அவற்றுக்குள் மறைந்திருக்கும் இறையாற்றல் நம் ஊனக் கண்களுக்குத் தெரியாது. அவற்றை அவ்வுயிர்கள் அறிந்து கொள்ளும் சூழல்களையும், அவற்றின் வலிமையை அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்புகளையும் இறைவனே தக்க காலத்தில் அறிமுகப்படுத்தி அவ்வுயிர்களோடு அவர் இன்னும் நெருக்கமாக வாழ்ந்து துணை செய்கின்றார் என்பதை அந்த உயிர்கள் அறிந்து கொண்டு அந்தக் குறைபாடுகளுககாக அவை நன்றி கூறும் நிலையை அவரே ஏற்படுத்துகிறார்.

இதை உலகமெல்லாம் உரக்க சொல்லும் ஒருவரைத்தான் இந்த தலையங்கத்தில் காணப்போகின்றோம்.

அவர் ஓர் இந்தியர். அவரின் பெயர் ஸ்பார்ஷ் ஷா. அவருக்கு வயது 19 தான். இன்று ஊனத்தில் பலமும், பலனும் உண்டு என்பதை உலகமெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கின்றார்.

இன்றளவில் அவர் உலகம் முழுவதும் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளார். லட்சக்கணக்கான ஊனமுற்றோருக்கு தனது சொற்பொழிவுகளாலும் பாடல்களாலும் உற்சாகத்தையும், தன்னம்பிக்கையையும் கொடுத்து வருகின்றார்.

அவருக்கு அப்படியென்ன ஊனம். தொடர்ந்து படிப்போம் உங்களுக்கே அது ஆச்சர்யத்தைத் தரும்.

அவர் பிறந்தபோது குணமாக்க முடியாத ஒரு வினோத நோயோடு பிறந்தார். அந்த நோய்க்குப் பெயர், ஆஸ்டோஜெனசிஸ் இம்பெர்ஃபெக்டா (Osteogenesis imperfecta) என்பதாகும். அந்த நோயினால் பாதிக்கப்பட்டவரின் எலும்புகள் சிறு அழுத்தம் ஏற்பட்டாலும் உடையக்கூடியதாக இருக்கும். அவரோடு யாராவது அழுத்திக் கை

குலுக்கினால், அவரின் கை விரல்கள், உடைந்து போய்விடும் அளவுக்கு அவரின் எலும்புகள் மிக மிக பலவீனமானதாகும். சாதாரணமான குழந்தைகளைப் போல அவர் ஓடமுடியாது, இதுவரை அவருக்கு 140 தடவை எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. சமீபத்தில் அவரின் தண்டுவடத்திலும் அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. அவர் சக்கர நாற்காலியில் நடமாடி வருகின்றார். அவரது உடம்பில் 8 இரும்பு ராடுகளும், 22 ஸ்குரூக்களும் உள்ளன. அவரின் எலும்புகளில் எது எப்போது எப்படி உடையும் என்ற பதைபதைப்பில் அவரும், அவரின் உறவுகளும் பயத்தோடு எதிர்பார்த்துக் கொண்டேயிருக்க வேண்டிய சூழல்தான் எப்போதும் உள்ளது.

இவ்வளவு பலவீனங்கள் இருந்தாலும், கடவுள் அவருக்கு பற்பல ஆற்றல்களையும், திறமைகளையும் வழங்கியுள்ளார். அவற்றை அவர் பயன்படுத்தி, உலகப் புகழ் பெற்று விளங்குகிறார். இந்த வெளிச்சத்தில், மக்களின் ஆதரவு, ஆரவாரம், அவர்கள் தரும் உற்சாகத்தில், அவர் ஓர் உடல் ஊனமுற்றவர் என்று அவரும், உலகமும் அறியாத, மறந்த அற்புதம் நடை பெறுகின்றது என்றால், இது கடவுள் செயல், நம் கண்களுக்கு அற்புதமே என்று திருவிவிலியம் கூறுவது எவ்வளவு பெரிய உண்மை.

அவர் மிகச் சிறந்த பாடகர், அவருக்கு கவர்ச்சிகரமான குரல், ராப் பாடகர், பாடலாசிரியர், சுய முன்னேற்ற, ஊக்கம் தரும் பேச்சாளர், மனிதநேய பண்பாளர். கின்னஸ் சாதனையாளர், 9 முறை சிறந்த பாடகராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். உலகம் முழுவதும் இதுவரை 300 மேடைக் கச்சேரிகளை 9 நாடுகளில் உலகப் புகழ் பெற்ற அரங்கங்களில் நேரலையாக நடத்தியுள்ளார்.

இணையத்திலும் லட்சக்கணக்கானோரால் கொண்டாடப்படும் பிரபலமாக உள்ளார். 150 நாடுகளைச் சேர்ந்த 300 மில்லியன் மக்கள் அவரைப் பின்பற்றுகின்றார்கள். யாகூ நிறுவனம் இந்தியாவின் மிகச் சிறந்த அற்புதமான குழந்தைகளில் ஒருவராக ஸ்பார்ஷ் ஷா தேர்ந்தெடுத்தது.

உலகில் உள்ள அனைத்து சிறப்பான ரேடியோ, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் பல முறை பங்கெடுத்துள்ளார்.

உலகில் மக்கள் மத்தியில் உள்ள தனது புகழைப் பயன்படுத்தி, இதுவரை இரண்டு மில்லியன் அமெரிக்க டாலர்களை சேகரித்து ஆதரவற்ற குழந்தைகளுக்காகவும், இளைஞர்களின் நல்வாழ்வுக்காகவும் தந்து உதவியுள்ளார்.

தனது உடல் ஊனம், பலவீனங்கள், நிராசைகள், தோல்விகள், போன்றவற்றால் மனமுடைந்து போகாமல், தன்னில் உள்ள பலவீனத்தை மீறி, இருக்கின்ற பலங்களை விஷ்வரூபமாக்கி வெற்றிபெற்று, மனதளவில் ஊனமுள்ளவர்களுக்கு உந்து சக்தியாக திகழும் ஸ்பார்ஷ் ஷா அவர்கள் உண்மையில் ஒரு விடிவெள்ளி என்றால் அது மிகையாகால்லவா?

அவரது வாழ்வின் இலட்சியம் என்னவென்றால், உலகில் வாழும் அனைவரையும், உற்சாகப்படுத்தி, சோர்ந்து போயிருக்கும் அனைத்து இதயங்களையும் தனது ஊக்கத்தால் தொடவேண்டும், அவர்களும் வெற்றி பெற முடியும் என்பதை அவர்களும் உணரவைப்பதுதான் என்று அவர் கூறியுள்ளார்.

இம்பாஸிபிள் (Impossible) என்பதை மாற்றி ஐ ஆம் பாஸிபிள் (I am possible) முடியாதது என்பது எதுவுமில்லை, மனபலம் இருந்தால் எதையும் யாராலும் வெற்றி பெறமுடியும் என்று அனைவரையும் நம்ப வைக்கவேண்டும் என்பதுதான் எனது வாழ்வின் லட்சியம் என்று அவர் அடிக்கடி கூறுவார். அவரின் இந்த எண்ணம்தான் அவரை உலகத்தில் வெற்றி பெற வைத்தது.

தனது வலிகளை மறந்து அடுத்தவர்களுக்கு நல்வழி காட்டும் அவர் நலம் பெறுக, நீடூழி வாழ்க.

And, when you want something, all the universe conspires in helping you to achieve it.

- Paulo Coelho -



# விவிலியம் அறிவோம் – 60



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## பத்து பெருந்துன்பங்கள்

மோசேயின் இரண்டாவது அழைப்பிற்குப் பிறகு அவரும் ஆரோனும் பார்வோனிடம் செல்கின்றனர். ஆண்டவர்தான் அவர்களைப் பார்வோனிடம் அனுப்பினார் என்பதை மெய்ப்பிக்க அவர்களிடம் அரும் செயல் ஒன்று பார்வோன் முன்னிலையில் செய்துகாட்டச் சொல்கிறார் ஆண்டவர். ஆரோனின் கோல் அரும் செயல் செய்வதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. கடவுளின் கட்டளைக்கேற்ப ஆரோன் தனது கையிலுள்ள கோலை பார்வோன் மற்றும் அவனுடைய அலுவலர் முன்னிலையில் விட்டெறிகிறார். அது பாம்பாக மாறுகிறது. எகிப்து நாட்டில் பாம்பு ஒரு அறிவுள்ள, மந்திர சக்திவாய்ந்த படைப்பாகக் கருதப்பட்டது. கீழைய எகிப்தின் காக்கும் தேவதையாக கருதப்பட்ட வாட்ஜெட் ஒரு பாம்பின் வடிவில் வடிவமைக்கப்பட்டிருந்தது. அது பார்வோனின் வல்லமையை வெளிப்படுத்தும் சின்னமாகவும் இருந்தது. மேலும் தெய்வங்களின் பகைவனான ஆபோபில் என்ற தீயசக்திகளின் பிரதிநிதியாக விளங்கிய ஆற்றலும் ஒரு பாம்பின் வடிவில் வடிவமைக்கப்பட்டிருந்தது. எனவே எகிப்திய எண்ணங்களில் பாம்பு மற்றெல்லா படைப்புகளையும்விட அச்சுறுத்தும் ஒன்றாக இருந்தது.

ஆரோனின் கையிலிருந்த கோல் பாம்பாக மாறியதைக் கண்டதும் பார்வோன் வியப்படையவில்லை. எகிப்தின் அரண்மனையில் வாழ்கின்ற ஞானிகளையும் சூனியக்காரர்களையும் வரவழைக்கின்றான். இவர்கள் மந்திரவாதிகள்; மந்திர தந்திரங்களைக் கையாள்வதில் வல்லுனர்கள். அவர்களும் மந்திர சக்தியால் தங்கள் கைகளில் இருந்த கோல்களை பாம்புகளாக மாற்றுகிறார்கள். ஆனால் ஆரோனின் கோல் அவர்களின் கோல்களை விழுங்கிவிட்டது என்ற குறிப்பு ஆரோனின் அரும் செயலின் மேன்மையையும், வல்லமையையும் வெளிப்படுத்துவதாக உள்ளது. அதோடு கூட எகிப்தின் மீது இஸ்ரயேல் மக்கள் மேற்கொள்ள இருக்கின்ற வெற்றியை முன்னுரைப்பதாவும் உள்ளது. மோசேயும் ஆரோனும் நடத்திய இந்த அரும்செயல் பார்வோனின் மனத்தை மாற்றவில்லை மாறாக கடினப்படுத்துகிறது. மோசேயையும் ஆரோனையும் கருவிகளாகக் கொண்டு ஆண்டவர் பார்வோனுக்கு எதிராகத் தொடர்ந்து போராடுகிறார். தண்ணீர் இரத்தமயமாதல், தவளைகள், கொசுக்கள், ஈக்கள், கால்நடைகள் சாவு, கொப்புளங்கள், கல்மழை, வெட்டுக்கிளிகள், காரிருள் மற்றும் தலைமகன் சாவு என பத்து பெரும் துன்பங்களை எகிப்தியர்மேல் ஆண்டவர் கொண்டு வருகிறார். இந்தப் பத்துப் பெருந்துன்பங்களையும் (7:14–11:10) ஆராயும்போது அவற்றில் பல ஒற்றுமைகளைப் பார்க்கமுடிகிறது. முக்கியமாக அவைகளின் கட்டமைப்பு, வார்த்தைப் பிரயேசகங்கள், நோக்கம் அனைத்துமே ஒன்றுபோல் உள்ளன. தொடர்ந்து பயன்படுத்தப்படும் இந்தக் கூறுகள் இந்தப் பெருந்துன்பங்களைப் பற்றிய உரைநடை எகிப்து நாட்டில் இவைகளைக் கண்டு அனுபவித்தவர்களுடைய சாட்சியங்களாக இருக்க முடியாது, மாறாக செயற்கைத்தனமாக உருவாக்கப்பட்ட இலக்கியப் படைப்புகளாக. மனித விடுதலைக்கான கடவுளின் போராட்டத்தைக் குறிப்பதற்காக படைக்கப்பட்ட படைப்புகளாகத் தெரிகின்றன. அடிமைத்தனத்தை தொடர்ந்து கடைபிடிக்க விரும்பிய மனிதர்களைக் கொண்ட ஒரு கூட்டத்தோடு நடத்திய போராட்டத்தை இவை மையமாகக் கொண்டுள்ளது.

விடுதலைப் பயணம் நூலில் வருகின்ற இந்தப் பத்துப் பெருந்துன்பங்கள் பற்றிய பாடங்களைப் படிக்கும்போது கடவுளின் விருப்பத்தை, கட்டளைகளை பார்வோன் மன்னன் கேட்டான், அவற்றைப் புரிந்துகொண்டான் என்பது தெளிவாகிறது. கடவுளின் திட்டத்தோடு அவனுடைய கொள்கைகளை இணைத்துச்செல்ல எல்லாவிதமான

வாய்ப்புகளும் அவனுக்குக் கொடுக்கப்பட்டன; ஆனால் தீமை அவனை விடவில்லை, தன் பிடியில் அவனை இறுக்குகிறது. பார்வோன் மன்னனின் தளராத கடின இதயம் மனித விடுதலைக்கான கடவுளின் அர்ப்பணத்திற்கு இணையாக உள்ளது. எனவேதான் போராட்டம் கடுமையானதாகிறது; காலமும் விரையமாகிறது என்பதை இக்கதைகள் உணர்த்துகின்றன. பார்வோனுக்கும் எகிப்தியர்களுக்கும் எதிராக நடத்தப்படும் இந்தப் போராட்டத்தில் வருகின்ற பத்துப் பெருந்துன்பங்களில், எட்டு பெருந்துன்பங்கள், தண்ணீர் இரத்தமயமாகல் (7:14-18; 20ஆ-21அ, 23-24), தவளைகள் (7:25; 8:1-4, 8-15), ஈக்கள் (8:20-32), கால்நடைகள் சாவு (9:1-7), கல்மழை (9:13-35), வெட்டுக்கிளிகள் (10:1-20), காரிருள் (10:21-29) மற்றும் இறுதியாக வருகின்ற எகிப்தியர்களின் தலைமகன் சாவு(11:1-8)ஆகியவை யாவேமரபு ஆசிரியர்களிடமிருந்து வருகின்றன. இந்தப் பாடங்களில் காணப்படுகின்ற சில சிறப்புக் கூறுகள்தான் இவை யாவேமரபு ஆசிரியர்களால் எழுதப்பட்டுள்ளன என்பதைக் கணிக்க உதவுகிறது.

யாவே மரபிலிருந்து வருகின்ற இந்த எட்டு பெருந்துன்பங்களிலும் வருகின்ற பாடங்கள் யஸவே கடவுளுக்கும் மோசேக்கும் இடையிலும், மோசேக்கும் பார்வோன் மன்னனுக்கும் இடையிலும் உரையாடல்களைக் கொண்டதாக உள்ளன. குறிப்பாக பெரும்பாலும் அவை கீழக்காணும் கட்டமைப்பைக் கொண்டுள்ளன:

1. ஆண்டவர் மோசேயை பார்வோனிடம் அனுப்பி உரையாடச் சொல்கிறார். அந்த உரையாடல் பெரும்பாலும், ஆண்டவர் கூறுகிறார் என்ற சொற்றொடருடன் ஆரம்பிக்கிறது.

2. மோசே வழியாக பார்வோனிடம் ஆண்டவர் கூறுகின்ற இறைவார்த்தை, எனக்கு வழிபாடு செய்வதற்காக என் மக்களைப் போகவிடு என்ற கட்டளையை உள்ளடக்கியதாக உள்ளது. இந்தக் கட்டளைக்கு பார்வோன் அடிபணியாவிட்டால் பெருந்துன்பம் ஒன்று வருவிப்பதாக அச்சுறுத்தல் கொடுக்கப்படுகிறது.

3. பார்வோன் கீழ்ப்படிய மறுக்கிறான். எனவே ஆண்டவர் பெருந்துன்பத்தை அனுப்புகிறார். பெருந்துன்பத்தினால் ஏற்படுகின்ற விளைவுகள் கூறப்படுகின்றன.

4. பெருந்துன்பத்தின் விளைவாக பார்வோன் மன்னன் மோசேயை அழைத்து பேசத் தொடங்குகிறான். மோசே ஆண்டவரிடம் மன்றாடி துன்பத்திலிருந்து எகிப்தியர்களை விடுவித்தால்



ஆண்டவர் கூறியபடி இஸ்ரயேல் மக்களைப் போகவிடுவதாக போக்குகாட்டுகிறான்.

5. மோசே ஆண்டவரிடம் வேண்டுதல் செய்ய, பெருந்துன்பத்திலிருந்து எகிப்தியர்கள் விடுவிக்கப்படுகிறார்கள்.

6. பெருந்துன்பங்களினால் வந்த கேடு அகற்றப்பட்டவுடன் பார்வோன் மன்னனின் இதயம் கடினமாகிறது. பார்வோன் மன்னன் இஸ்ரயேல் மக்களைப் போகவிடவில்லை என்ற செய்தியுடன் யாவேமரபு ஆசிரியர் ஒவ்வொரு பெருந்துன்பத்தையும் பற்றிய செய்திகளை நிறைவு செய்கின்றார். இது அடுத்த பெருந்துன்பத்தைப் பற்றிய கதையை ஆரம்பிப்பதற்கு ஏதுவாகவும் உள்ளது.

இந்தப் பாடங்களில் யாவேமரபு ஆசிரியர் மோசேயை ஒரு இறைவாக்கினராகச் சித்தரிக்கிறார் எனலாம். மோசேயின் செயல்களுக்கும் பிற்கால இறைவாக்கினர்களின் செயல்களுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. மோசே பிற்கால இறைவாக்கினர்களைப்போல ஆண்டவர் கூறுகிறார் என்ற முன்னறிவுப்புடன்தான் ஆண்டவருடைய கட்டளைகளை பார்வோன் மன்னனுக்குக் கூறுகிறார் (காண்க 1 அரசர் 21:19; எரேமி 2:2, 5; 6:6, 9, 16, 21, 22; ஆமோஸ் 1:3, 6, 9, 11, 13; 2;1, 4, 6). பெருந்துன்பம் தொடங்குவதற்கு முன்பே அவற்றை அறிவிப்பதும், ஆண்டவரோடு மன்றாடி பெருந்துன்பம் மறையச் செய்வதும்

இறைவாக்கினர்களின் கூறுகளைக் கொண்டதாக உள்ளன (காண்க 1 அரசர் 13:1-6; 17:17-24; 20:13-21; எசாயா 7:18-25; 8:5-8; 42:14-17; ஆமோஸ் 7:1-3, 4-6; எரேமி 14:1-9, 19-22; 18:20). பொதுவான கட்டமைப்பு மற்றும் மோசேயின் செயல்பாடுகளைத் தவிரமேலும் இரண்டு முக்கியக் கருத்துக்களை யாவே மரபிலிருந்துவரும் பாடங்களில் நாம் காணமுடிகிறது. முதலாவது கருத்தாக வருவது, யாவே யார் என அறிந்துகொள்வது (காண்க 8:10, 22; 9:29; 11:7). முதல்முதலாக மோசே பார்வோனைச் சந்தித்து ஆண்டவருடைய கட்டளைகளைக் கூறியபோது பார்வோன் மன்னன் கூறுகின்ற பதிலில் இந்தக் கருத்து அறிமுகப்படுத்தப்படுகிறது. பார்வோன் மன்னன் தன்னுடைய பதிலில், யார் அந்த ஆண்டவர்? அவரது பேச்சைக்கேட்டு இஸ்ரயேலை நான் ஏன் அனுப்பவேண்டும்? அந்த ஆண்டவரை நான் அறியேன்; இஸ்ரயேலரை நான் போகவிடவும் மாட்டேன் (5:2) என்கிறான்.

தொடர்ந்து வருகின்ற ஒவ்வொரு பெருந்துன்பங்கள் வழியாக யஸவே யார் என்பது பார்வோனுக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் வெளிப்படுத்தப்படுகிறது. யாவே மரபிலிருந்து வருகின்ற இரண்டாவது கருத்து,யாவே ஆண்டவர் இஸ்ரயேலரையும் எகிப்தியரையும் வேறுபடுத்திப் பார்த்தார் என்பதாகும் (8:22; 9:4, 6, 26; 11:7). பெருந்துன்பங்கள் எகிப்தியரை மட்டுமே பாதித்தன; இஸ்ரயேல் மக்கள் வாழ்ந்த இடங்களில் அவை எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இந்த இரண்டு கருத்துக்களும் பல இடங்களில் வந்தாலும் எல்லாப் பெருந்தன்பங்களைப் பற்றிய பாடங்களிலும் இவை இல்லை எனக் கூறலாம்.

எட்டு பெருந்துன்பங்களைப் பற்றிய பதிவுகள் யாவே மரபு ஆசிரியரிடமிருந்து வருகின்றன எனப் பார்த்தோம். மீதமுள்ள இரண்டு பெருந்துன்பங்களும், கொசுக்கள் (8:16-19) மற்றும் கொப்புளங்கள் (9:8-12) குருக்கள் மரபு ஆசிரியரிடமிருந்து வருகின்றன. யாவே மரபிலிருந்து வருகின்ற பெருந்துன்பங்களைப் பற்றிய உரைநடைச் சிறப்பியல்புகளைப் போலவே குருக்கள் மரபிலிருந்து வரும் பெருந்துன்பங்களைப் பற்றிய உரைநடையும் தனிச்சிறப்பியல்புகளைக் கொண்டதாக உள்ளன. இந்த இரண்டு கதைகளிலும் கீழ்க்காணும் கட்டமைப்பைக் காணலாம்:

1. கடவுள் மோசேயிடம் எகிப்திற்கு எதிராகச் செயலபடக் கூறுகிறார். அவருடைய செயல்களினால் பெருந்துன்பம் உருவாகும்.

2. கடவுளின் கட்டளைகளை மோசே நிறைவேற்றுகிறார். அதன் விளைவாக பெருந்துன்பம் எகிப்தின்மீது வருகிறது.

3. எகிப்திய மந்திரவாதிகளைப் பற்றிய குறிப்புகளை இந்த இரண்டு பெருந்துன்பங்களைப் பற்றிய பாடங்களிலும் காணப்படுகின்றன.

4. பார்வோன் மன்னனின் இதயம் கடினப்படுத்தப்படுகிறது எனவே அவன் கடவுளின் குரலைக் கேட்பதில்லை. அதுவே அடுத்த பெருந்துன்பம் ஏற்படுத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்குகிறது.

எகிப்திய மந்திரவாதிகள் குருக்கள் மரபிலிருந்து வருகின்ற பெருந்துன்பங்களைப் பற்றிய உரைநடையில் மட்டுமே தோன்றுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதைப்போலவே ஆரோன் கதாபாத்திரமும் யாவே மரபிலிருந்து வரும் கதைகளில் அவ்வப்போது தோன்றினாலும் குருக்கள் மரபிலிருந்து வரும் கதைகளில்தான் முக்கிய இடம் பெறுகிறார். குருக்கள் மரபு ஆசிரியரைப் பொறுத்தவரை மோசே அல்லது ஆரோனின் செயல்களால் பெருந்துன்பங்கள் ஏற்படுவதாக கூறுகிறார். ஆனால் யாவே மரபிலோ அவை கடவுளிடமிருந்து நேரடியாக வருவதாகக் காட்டப்படுகிறது. யாவே மரபிலிருந்து வருகின்ற சில கதைகளில் குருக்கள் மரப ஆசிரியரின் கைவண்ணம் தெளிவாகத் தெரிகிறது. குறிப்பாக ஆரோனின் செயல்பாடுகள்,எகிப்திய மந்திரவாதிகளின் பிரசன்னம், மேலும் பார்வோன் மன்னனின் இதயம் கடினமாக்கப்படல் - ஆண்டவர் சொன்னபடி அவன் அவர்களுக்குச் செவிசாய்க்கவில்லை என்பவற்றைக் கூறலாம். மேலும் பெருந்துன்பங்களைப் பற்றிய பாடங்களின் தொடக்கவுரையிலும் (7:1-7) முடிவுரையிலும் (11:9-10) குருக்கள் மரபு ஆசிரியரின் தாக்கம் உள்ளது. இந்தப் பாடங்களில் யாவே கடவுள் இந்தப் பெருந்தன்பங்களை எதற்காகச் செய்தார் என்ற கேள்விக்கு விடை ஆசிரியரின் புரிந்து கொள்தலின்படி கொடுக்கப்பட்டுள்ளது. பார்வோன் மன்னன் செவிசாய்க்கமாட்டான் என்பது கடவுளுக்கு முன்பே தெரியும் (7:4) ஆனாலும் ஆண்டவரின் அருஞ்செயல்கள் எகிப்துநாட்டில் பெருகிடவே (11:9) இவைகளைச் செய்கிறார். அடுத்த காணொளியில் பெருந்துன்பங்களின் பின்னணியில் உள்ள இறையியலையும் அவை நமக்குக் கற்றுத்தரும் பாடங்களையும் சிந்திப்போம்.

பயணம் தொடரும்...



# ஞாயிறு மறையுரை

## பொதுக்காலம் 29-ம் ஞாயிறு

16-10-2022

முதல் வாசகம் – விடுதலைப் பயணம் 17:8-13
இரண்டாம் வாசகம் – 2 தீமொத்தேயு 3:14-4:2
நற்செய்தி வாசகம் – லூக்கா 18:1-8

மறையுரை வழங்குபவர்

அருட்பணி. K. மரிய ஜோசப்
இயக்குனர்,
மேய்ப்புப் பணி நிலையம்
தருமபுரி மறைமாவட்டம்.



திருவிவிலியம் போர் செய்வதை ஆதரிப்பதில்லை. அமைதியையே சொல்லித் தருகிறது. செய்விக்கிறது. ஆனாலும் விவிலியத்தில் போர் நிகழ்வுகள் இல்லாமல் இல்லை. யாவே கடவுளை இஸ்ரயேலர் அவர்களது வல்லமை மிகுந்த போராளியாக உருவகப்படுத்திப் பார்த்தார்கள். (Warrior God). காரணம். அவர்கள் கடவுளை அவர்களது வல்லமையாகப் பார்த்தார்கள். அவர்களுக்காக வல்லமையோடு செயல்படுபவராக பார்த்தார்கள்.

அமலேக்கியர் இஸ்ரயேலரின் 12 குலத்தவருள் ஒருவரான எப்பிராயிம் குலத்திற்கு நெருங்கிய உறவினர்கள். அப்படி இருந்தாலும். ஒட்டுமொத்த இஸ்ரயேலரின் தீவிர எதிரிகளாக செயல்பட்டார்கள். செங்கடலைக் கடந்து இஸ்ரயேலர் மீட்கப்பட்ட சமயத்தில், அமலேக்கியர் அவர்கள்மீது போர் தொடுக்க வேண்டியதாயிற்று. இப்படிப் பகைமைப் பாராட்டி, தங்கள் பலத்தைக் காட்ட முனைந்த அமலேக்கியரை, கடவுள் அடியோடு அழிக்க வேண்டியதாயிற்று. (வி.ப.17:14) இப்படி இஸ்ரயேலின் கடவுளைப் பற்றி பழைய ஏற்பாட்டு விடுதலைப் பயண நூல் எடுத்துக்காட்டுகிறது.

நமது அவசரத்தில், ஆபத்தில், தேவையில் நாம் இறைவனிடம் கேட்டுகும்போது வெறுமனே கேட்டபதில்லை. அவரை வேண்டிக் கேட்கின்றோம். இப்படி இறைவேண்டல் (செபம்) செய்கிறபோது, மூன்று பெரிய செயல்கள் நடைபெறுகிறது.

1. யாரிடம் கேட்கின்றோமோ அவர் தவறாமல் நம் வேண்டுதலுக்கு செவிசாய்க்கிறார்.

2. நம் வேண்டுதலைக் கேட்டு செயல்படுகிறார்.

3. கேட்கிற நாம், நாம் கேட்பதைப் பெற்றுக்கொள்கிறோம்.

மோயீசனின் இறைவேண்டலும், யோசுவாவின் போர்ச் செயலும், ஒன்றாகவே நடைபெறுகிறது. வல்லமையாக வெளிப்படுகிறது. தொடர் இறைவேண்டல், தொடர் செயல் முயற்சி, இவை இரண்டும் தொடர் வெற்றியைத் தருகிறது.

எனக்கு உதவி ஆண்டவரிடமிருந்து வரும் என்பது இப்படித்தான் உண்மையாகிறது. என் இறைவேண்டலில் நான் யாருக்காக வேண்டுகிறேனோ, அவர்களை அது வல்லமைப்படுத்துகிறது. மோசேயின் இறைவேண்டல், யோசுவாவையும், இஸ்ரயேலரையும் வல்லமைப்படுத்துகிறது. பரிந்துரை செபம், இறைவேண்டல் செய்பவர் கடவுளோடு வைத்திருக்கிற நெருக்கத்தைக் காட்டுகிறது. கடவுள் உடனேயும், உறுதியாயும் செயல்படுகிறது.

இப்படி கடவுள் எப்படிப்பட்டவராக இருக்கிறார் என்பதை சுட்டிக் காட்டவும் அவர்முன் நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோம் என்பதை எண்ணிப் பார்க்கவும் இன்றைய லூக்கா நற்செய்தி நம்மை அழைக்கிறது. மனம் தளராமலும், எப்பொழுதும் இறைவேண்டல் செய்ய வேண்டும் என்பதற்கான ஒரு விளக்கமாக, நேர்மையற்ற ஒருவனும், நாதியற்ற கைம்பெண்ணும் பற்றிய உவமையை இயேசு சொன்னதாக நற்செய்தியாளர் லூக்கா ஒரு முன்குறிப்பு தருகிறார்.

ஒரு நடுவன் அந்த நகருக்கே நடுவன் போல், கடவுளுக்கு அஞ்சாதவன், மக்களையும் மதிக்காதவன், அதிக ஆளுகை, அதிகாரம் கொண்டவனாகவும், அஞ்சாதவனாகவும், மதியாதவனுமான இந்த பொல்லாத, நேர்மையற்ற


நடுவனிடம் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் கணவனை இழந்த நாதியற்ற நிலையிலிருந்த ஒரு கைம்பெண் தன் எதிரியை தண்டித்து, தமக்கு நீதிகேட்டு போராடுகிறாள். நேர்மையற்ற நடுவனிடம் நேர்மையாளியான கைம்பெண் தனக்கு நீதி கேட்கிறாள். விடாப்பபடியாக கேட்டுக் கொண்டேயிருக்கிறாள்.

தொல்லையின் பொருட்டு, இல்லையெனில் என் உயிரை வாங்கிவிடுவாள் என்ற ஒருவித அச்சத்தின் பொருட்டும் நான் இவளுக்கு நீதி வழங்குவேன் என முடிவெடுக்கிறான் அந்த நடுவன்.

ஓர் ஆள் அடையாளத்தைக் கொண்டவர்கள் (தாம் தேர்ந்து கொண்டவர்கள்), விடாப்பிடியாக (அல்லும், பகலும்) இறைவேண்டல் செய்யும்போது (தம்மை நோக்கிக் கூக்கிரலிடும்போது) கடவுள் அவர்களது குரலுக்கு செவிசாய்ப்பார். அவர்களுக்கு நீதி வழங்குவார் என்பதை கேள்வி கேட்பதுபோல சொல் அணி செய்து உறுதியிட்டுக் கூறுகிறார் லூக்கா. தாம் தொடக்கத்தில் சொன்ன, மனம் தளராமலும், எப்பொழுதும் இறைவேண்டல் செய்ய வேண்டும், என்ற தனது முன்னுரைக்கு, அப்படிப்பட்ட இறைவேண்டலுக்கு செவிமடுத்து செயல்படுபவராக கடவுள் இருக்கிறார் என முடிவுரை தருகிறார் லூக்கா. நிச்சயம் தருவார், அதையும் உடனே தருவார் என உறுதிப்பட சொல்லுகிறார்.

ஆயினும், மானிட மகன் வரும்போது, மண்ணுலகில் நம்பிக்கையைக் காண்பாரோ? என்று நமது மனநிலையையும், இறைநம்பிக்கையையும், பரிசோதித்துப் பார்க்க அழைக்கிறது இன்றைய இறைவார்த்தை. நாம் நம்பும் கடவுள் நமது முழு நம்பிக்கைக்குரியவராகவும் இருக்கிறார், ஆனால் நாம் அவரை நம்புவதில் நமது நம்பிக்கை எப்படிப்பட்டதாக இருக்கிறது? நமது இறைவேண்டலில் இந்த நம்பிக்கையும் விடாப்பிடியான உறுதிப்பாடும் இருக்கிறதா? ஆண்டவனின் வல்லமையை அனுபவிக்க இனியும் நாம் செய்ய வேண்டியது என்ன? நமது நம்பிக்கையை காண்பாரோ? நன்னம்பிக்கை தவறாத, நம்பினோரை கைவிடாத நம் கடவுள், நமக்கு நீதி வழங்காமல் இருப்பாரா? துணை செய்யக் காலம் தாழ்த்துவாரா?

– ஆமென்





# பொதுக்காலத்தின் 29-ஆம் ஞாயிறு

**வி.ப. 17:8-13, 2 தீமோ. 2 : 14-42, லூக். 18:1-8**

**16-10-2022**




**பா. சேவியர்**
பட்டாபிராம், சென்னை.


## திருப்பலி முன்னுரை

நற்செய்தியை அறிவித்து சான்று பகரும் சமுதாயமாக வாழவும், விடா முயற்சியுடனும், தளராத மன உறுதியுடனும் செபித்து வாழவும் வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 29-ஆம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

கடமைக்காக செபிக்காமலும், கடனுக்காக செபிக்காமலும் மனமொன்றி உணர்வுப்பூர்வமாக செபிக்க நாம் அழைக்கப்படுகிறோம். இன்றைய தினத்தை மறைபரப்பு ஞாயிறாக கொண்டாடவும் திருஅவை நம்மை அழைக்கிறது.

நம் வாழ்வும் செபமும் ஒத்துப்போகிறதா? இறைவன் எல்லாம் வல்லவர், அவரால் எதுவும் செய்ய முடியும் என்ற நம்பிக்கை நம்மிடம் இருக்கிறதா? நம் குடும்பங்களில் அன்றாடம் குடும்ப செபம் நடக்கிறதா? என்ற கேள்விகளை எழுப்பி நம்மை சிந்திக்க அழைக்கிறது இன்றைய வழிபாடு.

இறைவனின் அன்பை, அவரது இரக்கத்தை, அவரது மன்னிப்பை அனைத்திற்கும் மேலாக அவரது மீட்பை மற்றவருக்கு பகிர்ந்தளிக்கும் இறைவார்த்தையின் தூதுவர்களாக இறைவார்த்தையின் பணியாளர்களாக வாழ வேண்டும் என்பதையும், ஆண்டவரிடம் நாம் மனம் தளராது தொடர்ந்து இறை வேண்டல் செய்யும் போது அவர் நமக்கு செவிசாய்த்து நலன்களால் நம்மை நிறைவு செய்வார் என்பதையும் இன்றைய இறை வார்த்தை வழிபாடு எடுத்துரைக்கிறது.

செபம் என்பது மனித உறவை வளர்க்கும் ஓர் உன்னதமான கலை. இறைவன் முன்னிலையில் வாழ்வின் அர்த்தத்தை தேடுவதே செபம். நம்முடைய செபம் நம்மை இறைவனோடு ஒன்றிணைக்கச் செய்கின்றது என்ற உணர்வோடும், தளராத மனதோடு செபிப்பது நம்முடைய கடமை என்ற உறுதியோடும் நம்பிக்கையோடும் இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

யோசுவா கீழே இஸ்ரயேல் மக்களை வழி நடத்தி அமலேக்கியருக்கு எதிராக போர் புரிகிறார். மோசே மேலே மலை உச்சியில் இஸ்ரயேல் மக்களின் வெற்றிக்காக தொடர்ந்து செபிக்கிறார். மோசேயின் மனம், தளராத செபம் இஸ்ரயேலருக்கு வெற்றி தேடி தந்தது என்பதை விளக்குகிறது இன்றைய வாசகம். செபத்தின் வல்லமைக்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

தூய பவுலடியார் தன் அன்பு மகன் தீமோத்தேயுவுக்கு இறைவார்த்தை குறித்து அறிவுரை கூறுவது இன்றைய இரண்டாம் வாசகமாக அருளப்பட்டுள்ளது. மறைநூலை கற்பது மட்டுமல்ல, கற்றபடி வாழ்வதும், வாழ்வது மட்டுமல்ல அதை பிறருக்கு அறிவிக்கவும் வேண்டும் என்பதை வலியுறுத்தும் இவ்வாசகத்தை கவனமுடன் கேட்டு கருத்தில்கொண்டு வாழ்வோம்.

## மன்றாட்டுகள்

1) நீதியும் நேர்மையும் நிறைந்த இறைவா, இறைவார்த்தையை அறிவிக்க, அதன்படி மக்களை வழி நடத்தி இறையரசை இம்மண்ணில் வளரச் செய்ய தம்மையே அர்ப்பணித்து கொண்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவருக்கும் உமது அருளையும், ஆசியையும், பாதுகாப்பையும் தாரும். அவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட திருப்பணியை திறம்படச் செய்ய அவர் களுக்கு வேண்டிய ஞானத்தையும், ஆற்றலையும், நல்ல உடல் நலத்தையும் நிறைவாகத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) எம் கால் இடராதபடி கண்விழித்து காக்கின்ற இறைவா, இஸ்ரயேல் மக்கள் அமலேக்கியர் மீது காலை யிலிருந்து, மாலை வரை சளைக்காது போர் தொடுத்து வெற்றி கண்டதுபோல், எம் ஆன்ம எதிரியாகிய சாத்தானோடு தொடர்ந்து போராடவும், மனம் தளராது தொடர்ந்து செபித்து சோதனைகளை வெல்லவும் எங்களுக்குத் தேவையான மன உறுதியினை தந்தருள வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடு கிறோம்.

3) தாயின் கருவில் இருக்கும்போதே பெயர் சொல்லி அழைக்கும் தேவா, அறுவடையோ மிகுதி, வேலையாட் களோ குறைவு என்பதை நாங்கள் ஒவ்வொருவரும் உணரவும், உம் அழைப்பை ஏற்று, நீர் விட்டுச் சென்ற உம் திருப்பணியினை தொடர்ந்து ஆற்றிடவும் குடும்பத்தில் ஒருவரை மறைப்பணிக்கு மகிழ்வுடன் அர்ப்பணிக்கும் மனப்பக்குவத்தை நாங்கள் பெறவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) உலகத்தையும், அதில் வாழும் ஜீவராசிகளையும் படைத்துக் காத்து வரும் அன்பு இறைவா, நாட்டை ஆள் வோரை நிறைவாக ஆசீர்வதியும். அவர்கள் நாட்டின் வளத்திலும், மக்கள் நலனிலும் அக்கறை கொண்டோராய், தன்னிடம் உள்ள அதிகாரங்களை மக்கள் நலனுக்காக பயன்படுத்தி நேர்மையுடன் வாழ அருள் தர வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடு கிறோம்.

### எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை இயற்றிய
### இரட்சணிய மனோகரம்



**மெய்ம்மை யாக விளங்கிடும்**
**தெய்வ நீயல தில்லையே**
**ஐயனே உன்ன டைக்கலம்**
**கைவிடா தெனைக் காப்பாயே**



உண்மைத் தன்மையுடன் எழுந்தருளியுள்ள இறைவன் நீவிரே. மேன்மைத் தன்மை உடையவரே! நான் உம்மால் காக்கப்பட வேண்டியவன். என்னைக் கைவிடாமல் காத்து உம் அருள் வெளியில் உய்க்க வேண்டியது உம் கடமையன்றோ!



# திருக்குறள் வழங்கும் சமூக நெறிச் சிந்தனைகள்

சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன்** FSPM



## குறள் -15

**கொடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை**

### குறள் விளக்கம்

பொய்யாமல் வாழ்வைக் கெடுக்க வல்லதும் மழை: மழையில்லாமல் வளம் கெட்டு நொந்தவர்க்கும் துணையாய் அவ்வாறே காக்க வல்லதும் மழையாகும்.

### சிந்தனை

தேவையான நேரத்தில் பெய்யும்போது மழையை போற்றுகிறோம். அறுவடை நேரத்தில் மழை அதிகம் பெய்தால் விளைந்த பயிர்கள் அழிந்து விடுகின்றன. அச்சமயத்தில் மழையை தூற்றுகிறோம். கோடையில் மழை பெய்தால் வறண்ட நிலங்கள் சிரிக்கும். அளவுக்கு அதிகமாக மழைக் காலங்களில் மழை பெய்தால் வெள்ளம் கரைபுரண்டோடி தொல்லை ஏற்படுத்தும். நீராற்றல் மின்சாரம் தயாரிக்க உதவும். ஆற்றங்கரை அளவில்லா வெள்ள நீரின் ஆற்றல் மக்களை அடித்து செல்லும்போது அது துயரத்தை விளைவிக்கின்றது. தொடர்ந்து மழை பெய்தால் எரிச்சல் அடைகின்றோம். மழை காரணமாக விடுமுறை எனில் மகிழ்கின்றோம். கிரிக்கெட் மேட்ச் நடக்கும் போது மழை காரணமாக தடைபட்டால் மழை வேண்டாம் என மன்றாடுகின்றோம்.

டான்டலஸ் என்கின்ற மன்னன் ஜீபிடர் மற்றும் இதரத் தேவர்களுக்கு மிகவும் நெருக்கமாக இருந்தான். அவர்கள் விருந்து நடக்கும்போதெல்லாம் அவனை அனுமதித்தார்கள். அவனும் ஒருமுறை அவர்களைத் தன் வீட்டிற்கு விருந்துண்ண அழைத்தான். அவர்களுடைய தெய்வீக சக்தியை அறியும் பொருட்டு அதைப் பரிசோதிக்கும் ஆசையில் தன்னுடைய மகனின் மாமிசத்தையே விருந்தில் மிருக மாமிசம் போல் பரிமாறினான். தேவர்கள் வெகுண்டார்கள். அவன் மகனை உயிர்ப்பித்தார்கள். டான்டலஸ் கொல்லப்பட்டான். பாதாள உலகிற்கு மரணத்திற்கு பிறகு அனுப்பப்பட்ட அவனை 'டார்ட்டரஸ்' வசம் அனுப்பினார்கள். அதீதமாகத் தண்டிக்கப்பட வேண்டியவர்கள் டார்ட்டரஸ் வசமே அனுப்பப்படுவார்கள். டான்டலஸ் நிரந்தர விரக்தியுடன் கழுத்துவரை நிற்கும் தண்ணீரில் நிறுத்தப்பட்டான். அவனுக்கு தாகம் எடுக்கும். குடிக்க குனிந்தால் நீர் மட்டம் கீழே செல்லும். பக்கத்திலேயே காய்த்துக் குலுங்கும் மரங்கள் இருக்கும். பறிக்கக் கைகளை நீட்டினால் அவை விலகிச் செல்லும். எனவே அருகில் ஆசையைத் தூண்டும் கனியும், நீரும் கனிந்திருந்தாலும் பசி தணியாமலிருக்க அவனுக்கு தண்டனை.

அளவுக்கு அதிகமான கடல்நீர் இருந்தும் அதனால் பயனில்லை. நன்னீரின் பயனே அதிகம். தன்னை சுற்றி நீரிருந்தும் தன் தாகத்தை தணிக்க இயலாது என்றால் அதனால் பயனில்லை என்பதனை மேலே கூறப்பட்ட நிகழ்வு நன்கு விளக்குகிறது.

ஆனால் நீங்கள் உடைமையாக்கிக் கொள்ளுமாறு கடந்து சென்றடையவிருக்கும் நாடு மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த நாடு: வானத்தின் மழை நீரையே குடிக்கும் நாடு இச 11:11. நீர் இருந்தால் அந்த இடம் செழுமையாயிருக்கும். செழுமை இறைவனின் ஆசீர்வாதத்தை குறிக்கும் சொல். அளவுக்கு மீறும்போது அது அழிவைத் தருகிறது.

அவ்வப்போது பூமியை நிராகரிக்கும் மழை, ஒருபோதும் மழையை நிராகரித்ததில்லை பூமி என்கிறார் கவிஞர் தாமிரா

அழிவிற்கும் ஆக்கத்திற்கும் ஊற்றான மழைக்காக வேண்டுவோம். மழை நீரை சேகரிப்போம்: பாதுகாப்போம்: பயன்படுத்துவோம்.



# அகில உலக திருஅவைச் செய்திகள்

வழங்குபவர்
**திரு.வி.பி.ஆர்.கோவை**

1535 இல் புனித ஏஞ்சலா மெரிசியால் நிறுவப்பட்ட பெண்களுக்கான கற்பித்தல் அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு பாப்பரசர் கடந்த செப்டம்பர் 21ம் தேதியன்று தனது செய்தியை வழங்கினார். உங்களின் அழகு, உள்ளழகு உலகத்தில் ஒளிர விடுங்கள். அது உலகத்தின் செயற்கை அழகைவிட மேலானது. இயேசு தனது அன்பான செயல்களால் தன் அழகைக் காட்டினார். அத்தகைய அன்பின் வெளிப்பாட்டிற்காக அது தன்னை, தன் கைகளை அழுக்குப் படுத்திக்கவும் தயாராக இருக்கும். இன்றைய நாகரீக அழகு இறையன்புக்கும், பிறரன்புக்கும் ஒவ்வாத ஒன்று. அவற்றை இளைஞர்கள் தவிர்த்து, உங்களின் அன்பான அழகை உலகுக்கு வெளிப்படுத்துங்கள் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார்.

1962ம் ஆண்டு உருவாக்கப்பட்ட தாமஸ் அக்வினாஸ் சகோதரத்துவம் என்ற அமைப்பைச் சேர்ந்த குழுவினரை கடந்த செப்டம்பர் 30ம் தேதியன்று பாப்பரசர் சந்தித்தார். கல்விப் பணி என்பது ஒரு ஆன்மீக இரக்கச் செயல் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இறை இரக்கத்தின் பணியாளர்களாகவும், மறைபரப்புப் பணியாளர்களாகவும் இருந்து கலாச்சாரம், இளைஞர்கள், குடும்பங்களின் மேம்பாட்டிற்காக உழைக்கவேண்டும் என்று அவர்அறிவுறுத்தியுள்ளார் நம் போப் பிரான்சிஸ் அவர்கள்.

வடக்கு எத்தியோப்பியாவில் தொடர் குண்டு மழையால், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுள்ளனர். தொலைத்தொடர்பு முற்றிலுமாக முடக்கப்பட்டுள்ளதால், குண்டு வெடிப்பினால் எத்தனை பேர் கொல்லப்பட்டுள்ளார்கள், எத்தனைபேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறியமுடியாததாய் இருப்பதாக எத்தியோப்பிய கத்தோலிக்க திருஅவை செய்திகள் கூறுகிறது. அச்சுறுத்தல் காரணமாக இச்செய்திகளுக்கு யாரும் பொறுப்பேற்கத் தயங்குகின்றார்கள். பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு எத்தகைய உதவியும் கிடைக்காதவாறு அனைத்து வழிகளும் மூடப்பட்டுள்ளது. அதனால் மக்களின் வாழ்வாதாரங்கள் இன்றி பெரிதும் வாடுகின்றார்கள்.

நமது அண்டை நாடான இலங்கை தற்போது பொருளாதாரம், மற்றும் சமூக அரசியல் நெருக்கடியில் தவிக்கின்ற இத்தருணத்தில், இலங்கை கத்தோலிக்கத் திருஅவையினரின் பங்களிப்பு குறித்து விவாதிப்பதற்காக கடந்த அக்டோபர் 2ம் தேதியன்று, குருநகலா மறைமாவட்டத்தின் ஆயரும், இலங்கையின் ஆயர்கள் பேரவையின் தலைவருமான ஹரோல்ட் அந்தோனி பெரேரா அவர்களும், இலங்கை ஜனாதிபதியுடன் வடமேற்கு மாகாணத்தின் தலைநகரான குருநகலாவிலுள்ள ஆயரில்லத்தில் சந்தித்துப் பேசினார்கள். அதில் இலங்கையின் இந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்கான வழிகள் குறித்தும், அதற்கு இலங்கை கத்தோலிக்கத் திருஅவையின் பங்களிப்பு, செயல்பாடுகள் குறித்தும், குறிப்பாக கிறிஸ்தவர்களின் பொதுநன்மை, உண்மை, நீதிக்கான பங்களிப்பு பற்றியும் விவாதித்தார்கள். அந்தக் கலந்துரையாடலுக்குப் பிறகு இருவரும் அளித்த பேட்டியில், இலங்கை தேசத்தின் நலன், மக்களின் வாழ்வாதாரம், நலன், அதற்கான ஒவ்வாருவரின் பங்களிப்பு குறித்து விவாதிக்கப்பட்டன, ஆக்கப்பூர்வமாகவும் இருந்தது என்று கூறினார்கள்.



# இந்த வார திருப்பலி வாசகக் குறிப்புகள்

## பொதுக்காலம் 29-ம் ஞாயிறு - 16.10.22

**16.10.2022 – ஞாயிற்றுக்கிழமை**
முதல் வாசகம் : விடுதலைப் பயணம் - 17:8-13
இரண்டாம் வாசகம் : 2 தீமொத்தேயு 3:14-4:2
நற்செய்தி : லூக்கா 18:1-8

**17.10.2022 – திங்கட்கிழமை**
முதல் வாசகம் : எபேசியர் 2:1-10
நற்செய்தி : லூக்கா 12:13-21

**18.10.2022 – செவ்வாய்கிழமை**
முதல் வாசகம் : 2 தீமொத்தேயு 4:10-17
நற்செய்தி : லூக்கா 10:1-9

**19.10.2022 – புதன்கிழமை**
முதல் வாசகம் : எபேசியர் 3:2-12
நற்செய்தி : லூக்கா 12:39-48

**20.10.2022 – வியாழக்கிழமை**
முதல் வாசகம் : எபேசியர் 3:14-21
நற்செய்தி : லூக்கா 12:49-53

**21.10.2022 – வெள்ளிக்கிழமை**
முதல் வாசகம் : எபேசியர் 4:1-6
நற்செய்தி : லூக்கா 12:54-59

**22.10.2022 – சனிக்கிழமை**
முதல் வாசகம் : எபேசியர் 4:7-16
நற்செய்தி : லூக்கா 13:1-9



Christ
beside me,
Christ
before me,
Christ
behind me,
Christ
within me,
Christ
beneath me,
Christ
above me,

*- St. Patrick*